**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII /XXV Code of Criminal Procedure / BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 256/2021 | Date | : 25.03.2026 |
| Deposition of Witness for | : **அ.சா**.1 | Taluk | : |
| Name | : **பாலபார்கவி** | Calling | : |
| Father Name | : **கிருஷ்ணகுமார்** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.03.2026

(1ம் எதிரி ஆஜர், 2 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகளின் சார்பில் BNSS பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை**:

1. நான் ஈரோடு நாடார் மேட்டில் குடியிருந்து ஸ்ரீநாத் மளிகை கடை என்ற பெயரில் கடை வைத்து நடத்தி வருகிறேன். எனது கடைக்கு அருகில் ஆஜர் எதிரி சங்கீதா அரிசி கடை வைத்து நடத்தி வந்தார். அதில் ரஜினியும், சங்கீதாவும் அவருடைய கணவர் சரவணன் மற்றும் சரவணன் தம்பி ரமேஷ் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து ஏல சீட்டு நடத்தி வந்தார்கள். அதில் நானும் உறுப்பினராக சேர்ந்து ரூ. 3 லட்ச ரூபாய் ஏல சீட்டுக்காக இரண்டு சீட்டுகள் போட்டேன். சங்கீதா கடனாக கேட்டதின் பேரில் எனது கணவர் அவருக்கு இரண்டு லட்ச ரூபாய் கடனாக கொடுத்திருந்தார். மொத்தம் பத்து ஏலச் சீட்டுகள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஒரு சீட்டு நடைபெறும். பத்து தவணைகளாக கழிவுத்தொகை போக மீதமுள்ள தொகையை நாங்கள் செலுத்த வேண்டும். ஆறாவது தவணை நடந்த போது நானும் என் கணவரும் சென்று எங்களுடைய ஏலச் சீட்டை கேட்க போனோம். அப்போது சங்கீதா எங்களிடம் அந்த

சீட்டை பூங்கொடி என்ற நபர் எடுத்து விட்டதாக சொன்னார் நாங்களும் திரும்பி வந்து விட்டோம்.

2. பின்னர் ஒரு வாரம் கழித்து பூங்கொடி என்பவர் எங்களுடைய கடைக்கு வந்தபோது நான் அவரிடம் நீங்கள் சீட்டை எடுத்துக் கொண்டீர்களா என்று கேட்டேன் அதற்கு அவர் சீட்டு எடுக்கவில்லை என்றும், நான் சீட்டு எடுத்துக் கொண்டதாக பூங்கொடியிடம் சங்கீதா சொன்னதாகவும் சொன்னார். இரண்டு பேரிடமும் மாறி மாறி சங்கீதா சொல்லியுள்ளார். ஏற்கனவே ஏல சீட்டு ரூபாய் ஒரு லட்சத்தை எடுத்து ஹசீனா என்பவரிடம் நாங்கள் கேட்டபோது அவருக்கு ஏல சீட்டு ஒரு வாரம் கழித்து கொடுப்பதாக சொன்னதாகவும், அவருக்கும் அந்த தொகையை கொடுக்கவில்லை என்றும் எங்களிடம் சொன்னார்.

3. எனது கணவர் சுரேஷ் பாபு ரூ. 2 லட்சத்தை கடனாக கொடுத்த தொகையை கேட்பதற்காக நானும் எனது கணவரும் சங்கீதாவின் வீட்டிற்கு சென்றோம். 2019ம் ஆண்டு தேதி ஞாபகம் இல்லை ஒன்பதாவது மாதம் சங்கீதா கையெழுத்திட்ட ஒரு லட்சம் எழுதப்பட்ட காசோலையை சரவணன் என்பவர் என் கணவரிடம் கொடுத்தார். மீதமுள்ள ஒரு லட்ச ரூபாயை ஒரு வாரம் கழித்து தந்து விடுவதாகவும் சொன்னார்கள். மீண்டும் ஒரு வாரம் கழித்து நாங்கள் சென்று பார்த்த போது அக்கம் பக்கம் இருந்தவர்கள் அனைவரும் சீட்டு எடுத்தபோது அவர்கள் யாருக்கும் எதிரிகள் மூவரும் பணம் தரவில்லை என்று தெரியவந்தது. போன் செய்தபோது கடை வீடு ஆகியவை சாத்தப்பட்டிருந்தது போனும் எடுக்கவில்லை. ரமேஷ் எங்களிடம் வந்து சீட்டு போட்ட யாருக்கும் பணம் தர முடியாது என்று சொல்லி அவர் எங்களிடம் சண்டை போட்டார்.

4. ஒரு நாள் மாலை நேரத்தில் எதிரி சங்கீதாவின் வீட்டிற்கு நானும் எனது கணவரும் சென்றபோது சங்கீதா அவருடைய கணவர் மற்றும் ரமேஷ் ஆகியோர் அங்கு இருந்தார்கள். பணம் யாருக்கும் தர முடியாது நீங்கள் என்ன செய்வீர்களோ செய்து கொள்ளுங்கள் என்று எங்களை மிரட்டினார்கள். போடி தேவிடியா நீங்கள் என்ன செய்வீர்கள் என்று எனக்கு தெரியாதா என தகாத வார்த்தைகளால் என்னை

பேசினார்கள். சீட்டு போட்டு பல நபர்களை ஏமாற்றி பணம் எதுவும் தராமல் எதிரிகள் மோசடி செய்தது தெரிய வந்ததால் அவர்கள் மீது நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலீசார் எங்களை மீண்டும் அழைத்து இரண்டு முறை விசாரித்தார்கள்.

5. பின்னர் எனது கணவரின் முட்டை கம்பெனி பெயரான நான் ஸ்ரீநாத் FARM EGG என்ற பெயரிடப்பட்ட ஒரு லட்ச ரூபாய்க்கான காசோலையை சங்கீதா எங்களிடம் கொடுத்ததை நான் போலீசாரிடம் கொடுத்தேன். மேற்படி காசோலையை நாங்கள் வங்கியில் செலுத்திய போது அதில் தொகை இல்லை என்று வந்தது. எனவே அவர் எங்களை ஏமாற்றியது தெரியவந்தது. எனவே அசல் காசோலையை போலீஸ் விசாரணையின் போது அவர்களிடம் கொடுத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் காசோலை போலீசாரிடம் நான் வழங்கியது தான். **(SRINATH FARM EGG என்று பெயரிடப்பட்ட ஒரு லட்ச ரூபாய்க்கான காசோலை அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

6. எதிரிகள் எங்களுக்கு மொத்தம் இரண்டு லட்ச ரூபாய் தொகையும் அதனுடன் சீட்டு தொகையான நாங்கள் ஆறு தவணைகளாக செலுத்திய இரண்டு சீட்டு தொகைகளை எங்களுக்கு தர வேண்டும் ஆனால் இதுவரையும் அவர்கள் எங்களுக்கு தராமல் ஏமாற்றி வருகிறார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. என் பெயரில் மட்டும் தான் ஏலச்சீட்டு போட்டேன் என்றால் சரிதான். நான் ஏலச்சீட்டு போட்டதாக சொல்லப்படும் அந்த நிறுவனத்திற்கு எந்த பெயரும் இல்லை என்றால் சரிதான். மேற்படி ஏலச்சிட்டானது தமிழக அரசால் அனுமதி பெறப்பட்டு நடத்தப்பட்டதா என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சீட்டு தொகை செலுத்தியதாக கூறியுள்ள நிலையில் அதனை வங்கி மூலமாக நான்

செலுத்தவில்லை என்றால் சரிதான். நான் சீட்டு தவணைத் தொகை செலுத்தியது சம்பந்தமாக ஏலச்சீட்டு நடத்தியவரிடமிருந்து ஒப்புகை சீட்டு எதுவும் பெறப்படவில்லை என்றால் அவ்வாறு அவர்கள் வழங்குவதில்லை அதனால் பெறவில்லை.

2. எதிரி ரமேஷிடம் சீட்டு தொகை எதுவும் நான் செலுத்தவில்லை என்றால் சரிதான். அதேபோன்று எதிரி சரவணன் என்பவரிடமும் சீட்டுத் தொகை எதுவும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல செலுத்தியுள்ளேன். சரவணனிடம் எந்த தவணைத் தொகை எந்த தேதியில் கொடுத்தேன் என்று குறிப்பிட்டு என்னுடைய புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்பதை காண்பிக்க வங்கி குறிப்பாணையை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. ஆறு தவணை தொகைகள் செலுத்தியதாக கூறியுள்ள நிலையில் ஒவ்வொரு தவணை தொகையும் எவ்வளவு என்று குறிப்பாக என்னுடைய புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் அவ்வாறு குறிப்பாக சொல்லவில்லை.

3. எதிரி சங்கீதாவிற்கு எனது கணவர் ரூபாய் இரண்டு லட்சம் கடன் கொடுத்தார் என்று கூறியுள்ள நிலையில் அவ்வாறு கடன் கொடுக்கும் போது என்னென்ன ஆவணங்களை சங்கீதாவிடமிருந்து பெற்றுக் கொண்டார் என்றால் ஆவணங்கள் எதையும் பெறவில்லை. எந்த தேதியில் மேற்படி இரண்டு லட்ச ரூபாய் கொடுக்கப்பட்டது என்று என்னுடைய புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

4. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், ஒன்றாம் எதிரி சங்கீதா மூன்றாம் நபரிடம் (THIRD PARTY) வைத்திருந்த வரவு செலவு சம்பந்தமாக மூன்றாம் நபருக்கு கொடுத்திருந்த காசோலையை மோசடியாக பெற்று எங்களுக்கு மேற்படி காசோலையை கொடுத்ததாக பொய்யாக புகார் அளித்து அதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல் சாட்சிகள் மூன்று முதல் 19 வரையிலானவர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் சரிதான்.

5. புகார் கொடுப்பதற்கு முன்பு யார் யாரிடம் கலந்தாலோசித்து புகார் கொடுத்தேன் என்றால் யாரிடமும் கலந்து ஆலோசிக்கவில்லை 17 நபர்கள் சென்று புகார் கொடுத்தோம். நான் சொல்வது போல் எதிரி சங்கீதாவிடம் எவ்வித ஏல சீட்டிலும் நான் சேரவில்லை என்றும், அவ்வாறு ஏல சீட்டில் நான் பணம் செலுத்தி இருந்தால் அதற்கான ஆவணங்களை போலீசாரிடம் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிகளுடன் வேறு வகையில் ஏற்பட்ட வாய் தகராறு மற்றும் தள்ளுமுள்ளு காரணமாக ஏற்பட்ட பிரச்சனையை கருத்தில் கொண்டு எதிர்களை பழிவாங்க வேண்டும் என்பதற்காக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.03.25 17:22:45 -0800

Judicial Magistrate No.III,

Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII /XXV Code of Criminal Procedure / BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 256/2021 | Date | : 25.03.2026 |
| Deposition of Witness for | : **அ.சா**.2 | Taluk | : |
| Name | : **சுரேஷ்பாபு** | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 25.03.2026

(1ம் எதிரி ஆஜர், 2 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகளின் சார்பில் BNSS பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் ஈரோடு நாடார் மேட்டில் குடியிருந்து மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன் முட்டையும் சப்ளை செய்து வருகிறேன். அ.சா 1 பால பார்கவி என்னுடைய மனைவி ஆவார். எனது கடைக்கு அருகில் எதிரிகள் சங்கீதா, சரவணன், ரமேஷ் ஆகியோர் அரிசி கடை வைத்தும், ஏல சீட்டும் நடத்தி வந்தார்கள். அதில் நான் எனது மனைவி பெயரில் நானும் எனது மனைவியும் ஏல சீட்டு போட்டோம் அது ரூ.3 லட்சம் சீட்டு தொகையாகும். மொத்தம் இரண்டு சீட்டுகள் போட்டு ஆறு தவணைகள் செலுத்தினோம். சீட்டு தொகையைக் கேட்டால் பூங்கொடி அதை எடுத்து விட்டார் என்று எங்களிடம் சொன்னார்கள். அவர்களிடம் நாங்கள் சீட்டு தொகை எடுத்து விட்டதாக சொல்லி உள்ளார்கள். அவற்றை விசாரித்த போது யாருக்கும் சீட்டு தொகை அவர்கள் செலுத்தவில்லை என்று தெரிய வந்தது. பத்து அல்லது பதினைந்து நாட்கள் கடையை சாத்திவிட்டார்கள். ஃபோன் செய்த போது போன் சுவிட்ச் ஆஃப் என்று வந்தது. சீட்டு தொகை செலுத்திய நாங்கள் அனைவரும் பேசினோம்.

2. சங்கீதாவிற்கு குழந்தை இல்லை. அவர் குழந்தையை வாங்க வேண்டும் என்று சொல்லி என்னிடம் இரண்டு லட்சம் ரூபாய் பணத்தை கடனாக கேட்டார் நானும் கொடுத்தேன். பின்பு கேட்டபோது தருகிறேன் என்று சொன்னார்கள் ஆனால் தரவில்லை. ஒரு லட்ச ரூபாய் தொகை எழுதப்பட்ட காசோலையை என்னிடம் அவர் கொடுத்தார். அந்த காசோலையை நாங்கள் வங்கியில் செலுத்திய போது அது பணமில்லை என்று திரும்பி வந்தது. நான் கேட்ட போது உன்னால் என்ன பண்ண முடியுமோ பண்ணிக்கொள் பணம் தர முடியாது என்று எங்களிடம் சங்கீதா சொன்னார்.

3. கடந்த 28.10.2019 ஆம் தேதி மாலை 05.00 மணிக்கு நானும் எனது மனைவியும் சங்கீதாவிடம் பணம் கேட்டபோது பணத்தை தர முடியாது என்று சொல்லி தேவிடியா மகளே என்று தகாத வார்த்தையால் எங்களை பேசினார். அப்போது சரவணன் ரமேஷும் இருந்தார்கள். அவர்களும் நீ செய்வதை செய்து கொள் நாங்கள் தர முடியாது என்று சொன்னார்கள். அதனால் சூரம்பட்டி காவல்நிலையத்திற்கு சென்றோம் என் மனைவி புகார் கொடுத்தார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் காசோலைதான் சங்கீதா என்னிடம் வாங்கிய பணத்திற்காக கொடுத்த காசோலை (அ.த.சா.ஆ. 2) ஆகும். என்னிடம் வாங்கிய இரண்டு லட்சமும் நாங்கள் ஆறு தவணையாக செலுத்திய சீட்டு தொகையும் எங்களுக்கு வரவேண்டியவை ஆகும் ஆனால் எதிரிகள் எங்களுக்கு தராமல் ஏமாற்றி வருகிறார்கள். இதுவரையும் எங்களுக்கு தரவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. ஏலச்சீட்டில் நான் உறுப்பினரா என்றால் இல்லை. ஏலச்சீட்டிற்கு பெயர் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஆறு மாத தவணைத் தொகை செலுத்தியதாக கூறியுள்ள நிலையில் ஒவ்வொரு தவணையும் எவ்வளவு தொகை செலுத்தினேன் என்று போலீசாரிடம் நான் சொன்னேனா என்றால் குறிப்பாக சொல்லவில்லை. நான் இரண்டு லட்ச ரூபாய் தொகையை எந்த தேதியில் கொடுத்தேன் என்று குறிப்பாக போலீசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. எந்த தேதியில் முதல் எதிரி

காசோலையை கொடுத்தார் என்று போலீசார் என்னை விசாரணை செய்தபோது நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. என் மனைவி நடத்தும் மளிகை கடையில் சுமார் 10 அல்லது 15 நபர்கள் கூடி சண்டை போட்டார்களா என்றால் சண்டை போடவில்லை சீட்டு செலுத்தி ஏமாந்த நபர்கள் அங்கு கூடினார்கள். மற்ற நபர்கள் யார் யார் எவ்வளவு தொகை செலுத்தினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், ஒன்றாம் எதிரி சங்கீதா மூன்றாம் நபரிடம் (THIRD PARTY) வைத்திருந்த வரவு செலவு சம்பந்தமாக மூன்றாம் நபருக்கு கொடுத்திருந்த காசோலையை மோசடியாக பெற்று எங்களுக்கு மேற்படி காசோலையை கொடுத்ததாக பொய்யாக புகார் அளித்து அதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

3. மேற்படி இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல் சாட்சிகள் மூன்று முதல் 19 வரையிலானவர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் சரிதான். காசோலை திருப்பப்பட்டது சம்பந்தமாக தனியாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி காசோலையை முதல் எதிரி என்னிடம் கொடுக்கவில்லை என்றும் எதிரிகளுக்கும் மேற்படி சாட்சிகளுக்கும் வாய் தகராறு மற்றும் கைகலப்பு ஏற்பட்டது என்றும் அதை மனதில் வைத்துக் கொண்டு இந்த பொய் புகாரை என் மனைவி மூலம் கொடுத்து அதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.03.25 17:22:54 -0800

Judicial Magistrate No.III,

Erode.